VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜூவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To | Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHY**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 இதழ்:6 மார்:2019 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:3 Issue:6 MAR:2019 Rs.10/- Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

*81/1, மன்னப்பன் தெரு,*
*கோட்டூர், சென்னை – 600 085.*

**போன்: 044 – 2447 4744**

## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

**நடத்தும்**

## ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பூஜை மற்றும் பாராயணம்

**நாள்:**

**20.03.2019, புதன்கிழமை**

**மாலை 4.00 மணி**

**இடம்:**

**கோதர்மசாலா, மேற்கு மாம்பலம், சென்னை.**

**இவ்விழாவில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் பதிவு செய்து கொள்ள அணுக வேண்டிய தொலைபேசி எண்கள்**

**9444060346 / 94434 95950**

**சென்னை, கோட்டூர்புரம் ஸ்ரீ மஹா மேரு மண்டலியில் தினசரி நடக்கும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்**

**94440 60346**



# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்

## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

## இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**





# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 6

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

மார்ச் மாதம் வேதபாரதி செய்திகள் புத்தகம் வெளிவர உதவிய நல் உள்ளங்கள்

**ஸ்ரீ டி. சூரியநாராயணன்**
**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**
**ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**
**ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,**
**ஸ்ரீ சௌந்தரராஜன்,**
**ஸ்ரீ விஸ்வநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,**
**வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,**
**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,**
**நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,**
**ஸ்ரீ மணிசங்கர்**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 4 |
| மார்ச் மாத விசேஷங்கள் | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 6 |
| பிரதக்ஷிணம் | 8 |
| ஸ்துதிகள் | 10 |
| சுபாஷிதம் | 11 |
| கடவுளிடமிருந்து ஒரு கடிதம் | 12 |
| காரடையார் நோன்பு | 14 |
| சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள் அருளியவை | 16 |
| 10-வது ஹிந்து ஆன்மீக கண்காட்சி | 19 |
| பங்குனி உத்திரம் | 23 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 26 |
| தர்மத்தின் குரல் | 28 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 30 |
| உலக மகளிர்தினம் | 32 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டர்ஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

இந்த உலகத்தில் நாம் எல்லோரும் "இந்த கர்மம் எனக்கு சுகம் தரும், சுகம் தரும்" என்று கர்மத்தைச் செய்கிறார்கள். அதாவது எல்லோருக்கும் சுகமும் சந்தோஷமும் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு யாருக்கும் துக்கம் வேண்டாம். ஆனால் நாம் எதிர்பார்ப்பது போல் வாழ்க்கை அமையாது. நாம் காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை நம்முடைய மனதுதான் செயல்படுகிறது. நம்முடைய சரீரம் திடகார்த்தமாக இருக்க வேண்டும் என்று மனது நினைக்கிறது. என்னுடைய குடும்பம் சுகமாக சந்தோஷமாக இருக்க வேண்டும். என்னுடைய பொருட்கள் எல்லாம் என்னுடன் எப்போதும் இருக்க வேண்டும் என்று மனது நினைக்கிறது. நாம் மனதால் நினைப்பதற்குத்தான் நமக்கு சுதந்திரம் உள்ளது. ஆனால் நடப்பது வேறுவிதமாக அமைந்துவிடும். தாமரைப் பூவில் உள்ள வண்டு அந்த சுகந்தத்தில் (மகரந்தத்தில்) மயங்கி அந்த மலரிலேயே இருந்துவிடுகிறது. மாலையில் சூரியன் மறைந்தால் தாமரை மூடிக்கொள்ளும் போது அந்த வண்டு சுவாசிக்க முடியாமல் இறந்துவிடும். இது வண்டிற்கு தெரியாது. இது போல் மனிதர்களாகிய நம்முடைய வாழ்க்கையில் இரண்டு பாகங்கள் சுகமும், துக்கமும். சுகம்தான் துக்கமாக மாறுகிறது. சிறிது நேரம் ஏசியில் இருந்து திடீரென்று மின்சாரம் போய் ஏசி வேலை செய்யவில்லையானால் புழுக்கம் அதிகமாகி கஷ்டப்படுவோம். முதலில் இருந்த சுகமே துக்கமாக மாறுகிறது. நமக்கு இஷ்டப்பட்ட பலகாரத்தை சாப்பிட்டால் சுகம், அதையே அதிகமாக சாப்பிட்டால் உடல் உபாதை வந்து துக்கமாக மாறுகிறது. நாம் மற்றவர்களுக்கு சுகத்தைக் கொடுப்பதாக நினைப்போம். ஆனால் அது அவர்களுக்கு துக்கமாக தோன்றும். இது தான் வாழ்க்கை அதனால் தான் பகவான் கீதையில்

ஸுகதுக்கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ/
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபமவாப்ஸ்யஸி.//

*கீதை 2-38.*

என்கிறார்.

சுகத்தையும், துக்கத்தையும் ஒன்றாக கருத வேண்டும். சுகம் வரும்போது அதை மற்றவர்களுக்கு பங்குவைக்க வேண்டும். துக்கம் வரும் போது அதை நாமே ஏற்றுக்கொண்டு அதிலிருந்து வெளியே வரவேண்டும். நம் கையில்தான் சுகமும், துக்கமும் இருக்கிறது.

**- டி. சூரியநாராயணன்**



## மார்ச் மாத விசேஷங்கள்
### (மார்ச் 1/2019 முதல் மார்ச் 31/2019 வரை)

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 2 | சனி | ஏகாதசி விரதம் |
| 3 | ஞாயிறு | பிரதோஷம் |
| 4 | திங்கள் | மஹா சிவராத்திரி |
| 5 | செவ்வாய் | ராமேஸ்வரம் சிவன் தேர் |
| 6 | புதன் | அமாவாசை / வாஸ்து நாள் |
| 8 | வெள்ளி | சந்திர தரிசனம் / உலக மகளிர்தினம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி |
| 10 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் / சமயபுரம் பூச்சொரிதல் |
| 12 | செவ்வாய் | கார்த்திகை விரதம் / ஷஷ்டி விரதம் |
| 13 | புதன் | ஸ்ரீ ராகவேந்திரர் ஜெயந்தி |
| 14 | வியாழன் | சபரிமலை நடை திறப்பு |
| 15 | வெள்ளி | பங்குனி மாதப்பிறப்பு / காரடையான் நோன்பு (அதிகாலை 5.26) |
| 16 | சனி | ஸ்ரீரங்கம் ஸ்ரீ அரங்கநாதர் பங்குனி கருட ஸேவை |
| 18 | திங்கள் | பிரதோஷம் / மயிலை கபாலீஸ்வரர் 63 மூவர் |
| 20 | புதன் | பௌர்ணமி விரதம் / ஹோலி பண்டிகை |
| 21 | வியாழன் | பங்குனி உத்திரம் / சபரி மலை நடை அடைப்பு சபரி மலை பங்குனி உத்திரம் ஆராட்டு |


## ஸ்ரீ காஞ்சி மகானின் பாதுகை மகிமைகள் டிஜிடல் புத்தகம்

இந்தப் புத்தகத்தை இப்போது மிகவும் சுலபமாக வீட்டில், அலுவலகத்தில், பயணங்களில் படித்துப் பயன்பெறும் வகையில் ஆன்லைன் வசதி செய்யப்பட்டுள்ளது. டிஜிடல் புத்தகமாக உங்கள் கணினியில், கை பேசியில் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு நீங்கள் செய்ய வேண்டிய சுலபமான வழி இதுதான். கூகிள் சர்ச்-ல் KanchimahaninPadhugaiMahimaigalஎன்று டைப் செய்தால் போதுமானது. Amazon, Scribd, www.pustaka.co.in என்று பல்வேறு தளங்களின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு வசதியாகப் படிக்க முடியும்.

உங்கள் அயல்நாடு வாழ் சொந்தங்களிடமும் இந்தச் செய்தியைக் கொண்டு சேர்த்து மகா பெரியவரின் அருளாசியைப் பெறுங்கள்.

## அட்டைப்பட விளக்கம்

### ஸ்ரீ ராகவேந்திரர்

**பூஜ்யாய ராகவேந்திராய சதய தர்ம ரதா யச**
**பஜதாம் கல்ப விருக்ஷாய நமதாம் காமதேனவே**

"உச்சரிப்பை விட உன்னத பக்தியே சிறந்தது" கூறியவர் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் விஜயநகரப் பேரரசர்களின் ஆட்சிக்கு உட்பட்ட "ஹம்பி" என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் வாழ்ந்துவந்த வேதவிற்பன்னரான திம்மண்ணதத்தா, கோபிகாம்பா தம்பதியினருக்கு வேங்கடவன் அருலாள், 1589 ஆண்டு, பல்குண ஆண்டு, பங்குனி மாதம் சுக்லபட்ச சப்தமி, வியாழக்கிழமையன்று, மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் மூன்றாவது குழந்தையாக புவனகிரியில் பிறந்தார். ஸ்ரீ ராகவேந்திரர் இவருடைய இயற்பெயர் ''வேங்கடநாதன்'' இவர் விஷ்ணுபக்தரான பிரஹலாதரின் அவதாரமாக கருதப்படுகிறார். வேங்கட நாதனுக்கு அவருடைய அண்ணன் "சரஸ்வதி" என்ற பெண்ணை திருமணம் செய்துவைத்தார். இல்லறத்தில் இறங்கிய பின்னரும் இரை தேடலைவிட இறைதேடலே இவருக்கு பிடித்திருந்தது. மனைவிக்கு தெரிவிக்காமல் வீட்டைவிட்டு வந்து குருவை தேடி அலைந்து கும்பகோணம் சென்று அங்கு "ஸ்ரீ சுதீந்ர தீர்த்தர்" என்னும் மத்வ மகானைக் கண்டு அவரையே தன் குருவாக ஏற்றார். வெகுநாட்களுக்குப் பிறகு குரு இவருக்கு தீட்சை அளித்து "ராகவேந்திர தீர்த்தர்" என்று நாமம் சூட்டி தனக்குப் பிறகு மத்வ பீடாதிபதியாக பொறுப்பேற்கவைத்தார். மத்வ பீடாதிபதியாகப் பொறுப்பேற்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு தீர்த்த யாத்திரை புறப்பட்டார். பல இடங்களுக்குச் சென்று வைணவ நெறியையும் மத்வர் நிலை நாட்டிய துவைத மதத்தையும் போதித்தார். சென்ற இடமெல்லாம் இறைவனின் பெருமைகளை மக்களுக்கு உணர்த்தினார். பல இடங்களில் காலடி பதித்தபின் கடைசியாக இரண்டாவது முறையாக கர்நாடகாவில் உள்ள ஆதோனிக்கு வந்தார். அரசர் "சித்தி மசூத்கான்" அவருடைய மகிமையை சோதித்து அதில் தோல்வி அடைந்து தவறை உணர்ந்து மன்னிக்கும்படி வேண்டி மகானைப் பணிந்து ஆதோனி முழுவதையும் அவருக்கே அளிப்பதாகச் சொன்னான். ஆனால் ஸ்ரீ ராகவேந்திரர் (முஞ்சாலம் இன்றைய மந்திராலயம்) கிராமம் மட்டே போதும் எனக்கூறி அங்கே ஒரு பிருந்தாவனம் அமைக்கச் சொன்னார். அப்படியே அமைக்கப்பட்டது.



1671-ம் ஆண்டு (விரோதிகிருது) ஆவணிமாதம், கிருஷ்ணபட்க்ஷம், துவிதியை திதி கூடிய வியாழக்கிழமையன்று தம்முடைய சீடர்கள் முன்னிலையில் கண்களை மூடி ஜபமாலையை உருட்டிக்கொண்டு பிரணவ மந்திரத்தை ஜபித்துக் கொண்டு ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் ஜபமாலை உருட்டுவது நின்றது. குருராஜர் நிர்விகல்ப சமாதி அடைந்தார். அவருடைய சிஷ்யர்கள் அவரைச் சுற்றி பிருந்தாவன் ஸ்தாபனம் செய்து தலைக்கு மேல் 700 லக்ஷ்மிநாராயண சாலிக்ராமங்களைக் கொண்டு நிரப்பி அதற்கு மேல் வெள்ளிப் பலகையால் மூடி அதன்மேல் மிருத்திகையைப் பரப்பி பிருந்தாவன பிரதிஷ்டை செய்தார்கள்.

ஸ்ரீராகவேந்திரர் இன்றும் மந்த்ராலயத்தில் உள்ள பிருந்தாவனத்தில் வாசம் செய்து கொண்டு கற்பக விருட்க்ஷமாக, காமதேனுவாக தன்னை நாடிவருவோரின் வேண்டுதல்களை நிறைவேற்றி கொண்டிருக்கிறார்.

ஸ்ரீராகவேந்திரரின் முக்கிய சீடர்களில் ஒருவரான ஸ்ரீ அப்பண்ணாச்சாரியர் ஸ்வாமிகளின் மீது பக்தியுடன் நெஞ்சுருக பாடிய "ஸ்ரீமத் ராகவேந்திர ஸ்தோத்ரம்" பல அற்புத சக்திகளைத் தரவல்லது. அந்த ஸ்தோத்தரத்தில் கடைசியில் வரக்கூடிய வரிகள்தான் "பூஜ்யாய ராகவேந்திராய".

இந்தவருடம் ஸ்ரீராகவேந்திர ஜெயந்தி 13.03.2019 புதன்கிழமை

தொகுப்பு :
**டி. சூரியநாராணயன்**

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை – 600 042.
Cell : 94434 95950
Email - vedabharathichennai@gmail.com

# பிரதக்ஷிணம்

நம்முடைய பாரததேசத்தின் அடையாளமே கோயில்கள்தான். அதிலும் தமிழகத்தின் அடையாளம். உயர்ந்த அழகிய கோபுரங்களை உடைய கோயில்கள்தான். பெரிய பெரிய கோயில்களை எல்லாம் அந்த காலத்து அரசர்கள்தான் கட்டியுள்ளார்கள். அப்படி கட்டும்போது ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒன்றை தனித்தன்மையுடன் கட்டியுள்ளார்கள். பல கோயில்களில் விஞ்ஞானத்திற்கும் புரியாத பல அதிசயங்கள் நிகழ்கின்றன. தமிழகத்தில் மட்டும் 38,000 திற்கும் மேலாக கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் பல கோயில்களில் பல அதிசயங்கள் உள்ளன.

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலைச் சுற்றி மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் 'பிரதக்ஷிணம்' என்பார்கள்.

**'வேதபாரதி செய்திகள்'** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **'பிரதக்ஷிணம்'** வர தீர்மானித்துள்ளோம்.

இந்த மாதம் "பள்ளிகொண்ட ஹனுமான்" அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

## பிரதக்ஷிணம் (5) - பள்ளிகொண்ட ஹனுமான்



ஸ்ரீ ரங்கநாதர் என்றாலே பள்ளிகொண்ட காட்சிதான் நம் கண் முன் தோன்றும். அதே போல் ஹனுமான் என்றால்



ஸ்ரீராமர் சீதை லக்ஷ்மனனுடன் மிகுந்த பத்தியுடன் ஸ்ரீ ராமனின் காலடியில் அமர்ந்திருக்கும் காட்சிதான் தோன்றும். ஆனால் ஹனுமன் பள்ளிகொண்ட நிலையில் ஒரு கால்மேல் இன்னொரு காலை போட்டபடி பக்தர்களுக்குகாட்சி தரும் ஒரு அதிசய கோயில் உள்ளது. இந்த "பள்ளிகொண்ட ஹனுமான்" கோயில் நாக்பூரில் உள்ள "சாம்பலி" கிராமத்தில் உள்ள உயரமான மலைமீது அமைந்துள்ளது. இராம இராவண யுத்தம் முடிந்து எல்லோரும் நாடு திரும்பி வரும் வழியில் ஹனுமார் இந்த மலையில் சயனித்தபடி இளைப்பாறினாராம்.

இந்த சிலை ஆதி காலத்தில் நின்ற நிலையில் இருந்திருக்கலாம். பின் இயற்க்கைச் சீற்றத்தால் கீழே விழுந்திருக்கலாம் என சில பக்தர்கள் எண்ணி சிலையை நிற்க வைத்து பிரதிஷ்டை செய்ய முயன்றார்கள். ஆனால் ஹனுமான் திரும்ப திரும்ப கீழே படுக்கும் நிலையிலேயே கிடந்தாராம். ஆகையால் அவரை அப்படியே இருக்க வைத்து பூஜிக்க ஆரம்பித்தார்கள். ஹனுமான் ஆறடி நீளத்தில் செந்தூர வர்ணத்தில் காட்சி அளிக்கிறார். கோயிலின் நுழை வாயிலிலிருந்து சுவர் முழுவதும் "ஹனுமான் சாலிஸா" ஹிந்தியில் எழுதப்பட்டுள்ளது. பெண்களை சிலையின் அருகில் அனுமதிப்பதில்லை. ஹனுமான் கால் பக்கத்தில் இருந்து தரிசிக்கலாம். ஆண்கள் சுற்றி வர அனுமதி உண்டு. மனநலம் பாதிக்கப்பட்டவர்களை இங்கு அழைத்துவந்து அவர்களுக்கு பரிகாரம் செய்கிறார்கள். செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் சிறப்பாக அன்னதானமும் செய்யப்படுகிறது.

ஹனுமனை தரிசனம் செய்யும் போது பக்தர்கள் "ஜெய் பஜரங்க பலி" என்று முழக்கம் எழுப்பும்போது மனதுக்குள் ஒரு தனி ஆனந்தம் பிறக்கிறது என்று பக்தர்கள் கூறுகிறார்கள். வாழ்க்கையில் ஒரு முறை பார்க்கவேண்டிய கோயில்.

பிரதக்ஷிணம் தொடரும்...

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## ஸ்துதிகள்

**'ஸ்துதிகள்'** என்பது இறைவனின் பலவித தெய்வீக அம்சங்களை புகழ்ந்து பாடும் பாடல்களாகும். ஏராளமான புராணங்களிலும் மற்ற நூல்களிலும் ஸ்துதிகள் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஸ்துதிகளிலிருந்து மாதம் ஒரு ஸ்துதியை வாசகர்களுக்காக ''ஸ்துதிகள்'' என்ற இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம்.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

### 5. 'கஜேந்திர ஸ்துதி'

"திரிகூடமம்" (மூன்று மலைகள்) என்ற மலைகளிலிருந்து ஓடி வந்த பல ஆறுகளினால் ஒரு பெரிய அழகிய ஏரி அந்த பர்வதத்தின் பக்கத்திலேயே உருவாகியிருந்தது. அந்த ஏரியில் அப்ஸரஸ் பெண்கள் வந்து நீராடிச் செல்வதுண்டு. ஒரு சமயம் காட்டிலிருந்து யானைக் கூட்டம் அந்த ஏரியின் அருகில் வந்தன. அந்த நிர்மலமான நீரைக் கண்டதும் அதில் இறங்கி விளையாட எண்ணம் கொண்டன. அவ்வாறு விளையாடும் போது அந்த ஏரியில் இருந்த ஒரு பெரிய முதலை அந்த யானைக் கூட்டத்திலிருந்த ஆண் யானையின் ஒரு காலை கௌவிக் கொண்டது. யானை தன் பலம் கொண்ட மட்டும் காலை இழுத்தும் பலன் இல்லை. தன் கூட இருந்த மற்ற யானைகளும் சேர்ந்து அந்த ஆண் யானையை இழுத்தும் பலன் இல்லை. அதனால் மற்ற யானைகள் அந்த இடத்திலிருந்து போய்விட்டன. நாட்கள் நகர்ந்தன கஜேந்திரனுக்கு இனி தாக்கு பிடிக்க முடியாது என்பது தெளிவாகிவிட்டது. இத்தனை காலமாக அது தன் பலத்தையே நம்பியிருந்தது. இனி தன்னைக் காப்பாற்றக்கூடியவர் பரந்தாமன் ஒருவரே என்ற முடிவுக்கு வந்து தன் துதிக்கையை உயர்த்தி தூக்கியபடி "ஹே ஆதிமூலமே என்னைக் காப்பாற்று" என்று அலறியது. கஜேந்திரனின் அபயக் குடல் கேட்ட பகவான் ஸ்ரீமன் நாராயணன் தன் கருடன் மீது ஆரோகணித்து கஜேந்திரன் உயிருக்கு மன்றாடும் ஏரியிலே எழுந்தருளி தன்னுடைய சக்ராயுதத்தால் முதலையின் உடலை துண்டித்து கஜேந்திரனை அதன் பிடியிலிருந்து விடுவித்தார். கஜேந்திரன் பகவானை வலம் வந்து பலவாறு ஸ்தோத்திரங்கள் செய்து பகவானுடைய மலரடிகளை அடைந்தான். கஜேந்திரன் பகவானை நோக்கி செய்த ஸ்துதிகள் தான் இந்த "கஜேந்திர ஸ்துதி"

"நாராயணா அகிலகுரோ பகவன் நமஸ்தே"

(ஸ்கந்தம் 8 - அத்தியாயம் 3 - ஸ்லோகம் 2 முதல் 29)

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



## 3. சுபாஷிதம்

"சுபாஷிதம்" என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். சம்ஸ்கிருத பாடம் கற்றுக்கொள்ளும் போது இத்தகைய சிறு சிறு ஸ்லோகங்களை கற்றுத்தருவார்கள். இந்த வகையான ஸ்லோகங்கள் சொல்வதற்கு கம்பீரமானதாகவும் அந்த மொழியின் மீது ஒரு பிடிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும் என்பது மறைபொருளாக இருந்தபோதிலும், இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. துர்லபம் த்ரயமேவைதத் தேவானுக்ரஹஹேதுகம்
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷஸ்ஸ்ரய:**

பிறப்பு, வீடுபேறு, மாமனிதர்களின் நட்பு இம்மூன்றும் தெய்வத்தின் கட்டளையின்றி நிகழாது.

**2. ஜிதோ தர்மோ ஹ்யதர்மேண ஸத்யம் சைவாந்ருதேன ச
ஜிதாச்சோரைஸ்ச ராஜாந: ஸ்த்ரீபிஸ்ச புருஷா:கலௌ
ஸீதந்தி சாக்னிஹோத்ராணி குருபூஜா ப்ரணச்யதி
குமார்யாஸ்ச ப்ரஸூயந்தே தஸ்மின் கலியுகே ஸதா**

-பராசர ஸ்ம்ருதி 1-30, 31.

கலியுகத்தில் அதர்மத்தால் தர்மமும், பொய்மையால் வாய்மையும் வெல்லப்படும். கள்வர்களால் அரசனும், பெண்களால் ஆண்களும் வெல்லப்படுவார்கள். வேள்விகள் குறையும்; குரு வணக்கம் தேயும்; குமரிகள் தாயாவார்கள்; கலியுகத்தின் குணநலன்கள் இவ்வாறே அமையும்.

**3. ஸுகம் சேதே ஸத்யவக்தா ஸுகம் சேதே மிதவ்யயீ
ஹிதபுக் மிதபுக் சைவ ததைவ விஜிதேந்த்ரிய;**

உண்மையைப் பேசுபவனாலும், குறைவாய்ச் செலவழிப்பவனாலும், சத்தான உணவைக் குறைவாய் உண்பவனாலும், புலன்களை வென்றவனாலும் அமைதியாய்த் துயில முடியும்.

தொடரும்....

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

# கடவுளிடமிருந்து ஒரு கடிதம்

அன்புள்ள ................................

இன்று காலை நீ படுக்கையிலிருந்து எழுந்தபோது என்னை நினைத்து ஒரு சில விநாடிகள் பேசுவாய், அல்லது நேற்று உனக்கு நடந்த சில நல்லவற்றை நினைத்து எனக்கு நன்றி கூறுவாய் என்று உன்னையே கவனித்து கொண்டிருந்தேன். ஆனால் நீ எழுந்தவுடன் படுக்கையில் இருந்த உன் கைபேசியில் எதையோ படித்துக் கொண்டிருந்தாய். அதன் பிறகு எழுந்து காலைக் கடன்களை முடித்து குளித்துவிட்டுவந்தாய். அப்போது உனக்கு அதிக நேரம் இருந்தது. அப்போதாவது கட்டாயம் என்னை நினைப்பாய் என்று காத்திருந்தேன். ஆனால் நீ இங்கும் அங்கும் ஓடிக்கொண்டே இன்று போட்டுக் கொள்ளவேண்டிய உடைகளைத் தேடிக் கொண்டிருந்தாய். அதன்பிறகு காலை உணவு சாப்பிடும் போது கட்டாயம் என்னை நினைப்பாய் என்ற ஆர்வத்துடன் உன்னையே கவனித்து கொண்டிருந்தேன். ஆனால் நீ மீண்டும் அந்த சிறு கைபேசியில் யாரிடமோ பேசிக்கொண்டே சாப்பிட்டாய். அதன் பிறகு உன் மனைவியிடம் பேசிவிட்டு அலுவலகம் கிளம்பிச் சென்றாய். அலுவலகத்தில் மதியம் சாப்பாட்டு நேரத்தில் உன் நண்பர்கள் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து சாப்பிட ஆரம்பிக்கும் முன் என்னிடம் சில விநாடிகள் பேசினார்கள். ஆனால் நீ அவர்களை பார்த்தும் என்னிடம் பேசுவதற்கு சங்கடப்பட்டதைப் பார்த்தேன். பரவாயில்லை இன்று இன்னும் நேரம் இருக்கிறதே என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன். மாலையில் வீட்டிற்கு போனவுடன் டி.வி. முன் அமர்ந்து பார்த்துக் கொண்டும் நண்பனிடம் கைபேசியில் அரட்டை அடித்துக் கொண்டும் இருந்தாய். நான் மிக பொறுமையாக உன் முன் நீண்ட நேரம் காத்திருந்தேன் விளைவு, ஏமாற்றமே. இரவு நீ படுக்கைக்குச் சென்றுவிட்டாய். பாவம் நீ மிகவும் சோர்வாக இருக்கிறாய் என்று நினைத்துக் கொண்டேன். உன் குடும்பத்தினருக்கு “குட் நைட்” சொல்லிவிட்டு தூங்க ஆரம்பித்துவிட்டாய். பரவாயில்லை நான் உனக்காக இருக்கிறேன் என்பதை நீ உணரவில்லை. நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். ஒவ்வொரு தினமும் நீ எழுந்திருக்கும் போது என்னை வேண்டுவாய், பேசுவாய் என்று பொறுமையாக காத்திருப்பேன் காரணம் நான் உன்னை விரும்புகிறேன்.

உன்னுடைய நண்பன்
கடவுள்

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்.**



FORM IV

Statement about ownership and other particulars about newpaper VEDABHARATHI SEITHIGAL as required to be published under Sec. 19--D Sub sec (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the Registration of New Papers ( Central Rules ) 1956

| | |
|---|---|
| 1 Place of publication | Chennai |
| 2 Periodicity of Publication | Monthly |
| 3 Printer's Name<br>Nationality<br>Address | R.Gowthama Sankar<br>Indian<br>Sabanayakam Printers,<br>No 39, Millers Road,Kilpauk<br>Chennai- 600 010. |
| 4 Publisher's name<br>Address | R.VENKATARAMAN<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |
| 5 Editor's Name<br>Nationality<br>Address | R.VENKATARAMAN<br>No. 31, Seshadripuram 7th Main Rd<br>Baby Nagar,<br>Velachery,<br>Chennai- 600 042 |
| 6 Name and Address of New paper and partners holding More than one percent of the total capital | VEDABHARATHI SEITHIGAL<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |

I,R.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai - 600042 31.03.2020 ( Sd ) R.Venkataraman

# காரடையார் நோன்பு



மாசி மாதம் முடியும் நேரம் பங்குனி மாதம் தொடங்கும் நேரம் செய்யும் நோன்பு தான் "ஸாவித்திரீ நோன்பு" 'ஸாவித்திரீ எமனிடிமிருந்து தன் கணவன் சத்யவானை மீட்ட தினம் சுமங்கலிகள் மட்டுமல்லாமல் 3 வயதுக்கு மேல் உள்ள பெண் குழந்தைகளும் நோன்பு நோற்க வேண்டும். நோன்பு நேரத்தை ஸாஸ்திரிகள் மூலம் தெரிந்து கொண்டு மஞ்சள் சரட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும். நோன்பு நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பு குளித்துவிட்டு சுமங்கலிகள் மடிசார் கட்டிக்கொண்டு கார் அரிசி மாவையும் காராமணியையும் சேர்த்து வெல்லம் போட்டு நோன்பு அடை உண்டாக்க வேண்டும். பூஜை அறையை துடைத்து அரிசி மாவில் கோலமிட்டு விளக்கேற்றி விளக்கின்முன் நோன்பு கோலம் போட வேண்டும். அதன் பின் பூஜை அறைக்கு முன் அல்லது காமட்சி அம்மன் படத்திற்கு முன் வீட்டில் எத்தனை பெண்கள் உள்ளார்களோ அத்தனை கோலம் தனித்தனியாக போட வேண்டும். அதன்மேல் நுனி வாழை இலையை வைத்து ஓரத்தில் வெற்றிலை பாக்கு, பழம், பூ கட்டிய மஞ்சள் சரடு, பூ ஆகியவற்றை வைக்க வேண்டும். இலையின் நடுவில் தயாரித்த நோன்பு அடைகளில் இரண்டு அடைகளை வைத்து அதன்மேல் உருகாத வெண்ணையையும் வைக்க வேண்டும். பிறகு எல்லோரும் நோன்பு நோர்க்கும் நல்ல நேரத்தில் இலைக்கு முன் கிழக்கு பார்த்து உட்கார்ந்து அடையை அம்பாளுக்கு நிவேதனம் செய்ய



வேண்டும். அப்படி செய்யும் போது கீழ்க்கண்டவாறு ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

உருகாத வெண்ணையும் ஓரடையும் வைத்தேன்

ஒருக்காலும் என் கணவன் என்னை பிரியாதிருக்க வேண்டும்.

பிறகு நோன்பு கயிற்றை கழுத்தில் கட்டிக்கொண்டு மற்ற பெண்களும் கட்டிக்கொள்ள வேண்டும். சின்ன குழந்தைகள் இருந்தால் அவர்களை சொல்ல வைத்து அவர்களுக்கும் கட்டிவிட வேண்டும். பிறகு இலையில் வைத்த இரண்டு அடைகளில் ஒன்றை மட்டும் தான் சாப்பிட்டுவிட்டு மற்றொன்றைத் தன் கணவனுக்கு வைத்துவிட்டு அம்பாளை நமஸ்கரித்து விட்டு தன் கணவனையும் நமஸ்கரிக்க வேண்டும். பக்தியுடன் இந்த நோன்பை செய்தால் அந்த பெண்ணும் அவளுடைய கணவனும் ஆரோக்யத்துடன் நிண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

காரடையார் நோன்பு நாள் : 15.03.2019 வெள்ளிக்கிழமை நோன்பு நேரம் விடியற்காலை 5.26 மணிக்கு.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்.**

உ
குருவே சரணம்

**வேதபாரதி**
(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

**அந்தண சிறுவர்களுக்கு மற்றும் பெரியவர்களுக்கு சந்த்யா வந்தன பயிற்சி முகாம்**
(உணவு, உறைவிட பயிற்சி)

நாள் : மே 17, 18, 19 - 2019
இடம் : ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளி, கிழக்கு தாம்பரம்

முன்பதிவிற்கு : **9443495950 / 9445102193**

**ஜாதக பரிவர்த்தனைக்கு அனுகவும் :**

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## பக்தியின் நிலைகள்



ஆதிசங்கர பகவத்பாதாள் தமது சிவானந்தலஹரியில், பக்தியின் வெவ்வேறு நிலைகளைப் பல உதாரணங்களோடு மிக அழகாக விவரித்துள்ளார். முதலில், பக்தன் பிரயத்தனப்பட்டு தன் மனதை இறைவனின் பக்கம் திருப்பி, அதை அவருடைய பாதங்களில் வைக்கிறான். அங்கோல மரத்தின் விதையானது, தன் தாய் மரத்தோடு ஒட்டிக்கொண்டிருப்பதை இதற்கு உதாரணமாகக் கூறுகிறார் சங்கரர். இறைவனிடத்தில் பக்தன் தன் மனதைச் செலுத்தியதும், அவர் அவனுக்குப் பல விதங்களிலும் அனுகூலமாக இருந்து அருள்கிறார். பக்தன் தம்மை விட்டுப் பிரிந்து செல்லாமலிருப்பதற்காக, இறைவன் அவனைத் தம்மை நோக்கி இழுத்துக் கொள்கிறார் என்று பக்தியின் இரண்டாவது நிலை விவரிக்கப்பட்டுள்ளது. காந்தத்தை நோக்கி ஊசி ஈர்க்கப்படுவதைத்தான் இந்நிலைக்கு உவமையாகக் கூறுகிறார் பகவத்பாதாள்.

பக்தனின் உள்ளம் இறைவனிடத்தில் பரிபூரணமாக நிலைத்துவிட்டதேயானால், அப்பொழுது இறைவன், தமது பங்கிற்கு, பக்தனிடத்தில் எல்லையில்லா அன்பைப் பொழிகிறார் என்று பக்தியின் மூன்றாவது நிலையை சுலோகம் விவரிக்கிறது. ஒரு பதிவிரதை கணவனுக்கு அன்புடன் சேவை புரியும் போது, எப்படி பதிலுக்கு கணவனும் அவளிடத்தில் தனது அன்பைக் காட்டுவானோ, அப்படியுள்ளதாம் இந்த மூன்றாவது நிலை.

பக்தனின் பிரேமை வளர, வளர, அவன் இறைவனுக்கு ஓர் ஆபரணமாகவே ஆகிவிடுகிறான். உண்மையில், பிரஹ்லாதன் என்ற ஒரு பக்தன் இல்லாதிருந்தால், இறைவன் நரசிம்மராக அவதாரமெடுத்து உலகை இரக்ஷித்திருக்க மாட்டார். ஆகையால், ஒரு விதத்தில் பார்த்தால், பக்தனால் இறைவனின் புகழ் மேலும் உயர்கிறது என்றே கூறலாம். இதுவே பக்தியின் நான்காவது நிலையாகும். ஒரு மரத்தைச் சுற்றிப் படர்ந்திருக்கும் ஒரு கொடி, இந்நிலைக்கு மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது. நான்காவது நிலையைக் கடந்ததும், பக்தன் இறைவனோடு முழுமையாக ஐக்கியமாகி விடுகிறான். இதுதான் பக்தியின் உன்னத நிலையாகும். கடலில் சென்று கலக்கும் ஒரு நதியைப் போல், பக்தன் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடுகிறான் என்று பக்தியின் கடைசி நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நதி கடலைச் சென்றடைந்துவிட்டால், பிறகு அதனைக் கடலில் இருந்து வேறுபடுத்திக் காண்பது என்பது இயலாது. அதே போல் பக்தனும் இறைவனிடத்திலிருந்து பிரிக்க முடியாதவனாகி விடுகிறான்.

தொடரும்....



### வாசகர் கடிதம்

அன்புள்ள அய்யா, வேதபாரதி பிப்ரவரி *2019* இதழ் கண்டேன். மாதத்திற்கு மாதம் மெருகு கூடிக்கொண்டே செல்கிறது.பல தற்காலத்திற்குத் தேவையான உபயோகமான நல்ல வியூகங்கள் இடம் பெறுகின்றன. காதலர் தினம் பற்றி ஓர் கட்டுரை பார்த்தேன். தலைப்பைப் பார்த்தஉடன் வேதபாரதியில் இப்படி ஒரு கட்டுரையா என்ற வியந்தேன். முழுவதும் படித்த பின்புதான் அதன் உண்மையான காரணம் புரிந்தது. நல்ல மெஸேஜ். *12.02.2019* சனிக்கிழமை நிகழ உள்ள பீஷ்ம தர்ப்பணம் மற்றும் ஸங்கல்ப மந்திரமும் போட்டிருந்தால் பத்திரிக்கையின் உபயோகம் இன்னும் அதிகரிக்கும் மற்றபடி ஒன்றும் குறையில்லை நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,

**கே.அனந்தரத்தினம், ஸ்ரீரங்கம்.**

வாசகரின் ‘ஸங்கல்ப மந்திரமும் போட்டிருக்கலாம்’ என்ற ஆலோசனை கருத்தில் கொள்ளப்பட்டது. நன்றி. ஆசிரியர்.

### வருடாந்திர சிறப்புக்கூட்டம்

வேதபாரதியின் வருடாந்திர சிறப்புக்கூட்டம் வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ளது.

தேதி : *31.03.2019*, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை *3.00* மணி முதல் *6.00* மணிவரை

இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

# கோவை 'யுவஸ்ரீ' நிகழ்ச்சி

கோவை 'யுவஸ்ரீ' வாழ்வியல் பயிலரங்கம் கோவை ராம்நகர், ஐயப்பன் பூஜா சங்க வளாகத்தில் 03.02.2019 ஞாயிறு அன்று வேதபாரதி அமைப்பின் சார்பாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதி கோவை பொறுப்பாளர் ஸ்ரீ விஜயன் குடும்பத்தினர்கள் கடுமையான உழைப்பின் வெளிப்பாட்டில் 1000 பேர் அமர்ந்து கோடி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண நிகழ்ச்சியும் பிரதான ஹாலில் நடைபெற்றது. காலை 6.30 மணி முதல் அந்தண சிறுவர்களுக்கு ஸந்த்யாவந்தன வகுப்பும் ஸமிதாதானமும் நடைபெற்றது. திருச்சியிலிருந்து வந்திருந்த ஸ்ரீ சந்திரசேகர் ஜி, சென்னையிலிருந்து ஸ்ரீமதி காந்தலெட்சுமி சந்திரமௌலி, டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன், ஸ்ரீமதி காந்தாமணி ஆகியோர் முதல் நாள் இரவே வந்து தங்கி மறுநாள் நிகழ்ச்சிக்கான வகுப்பு அட்டவணை தயார் செய்து, அதன்படி மறுநாள் 4.30 மணி முதல் பெண் குழந்தைகளுக்கு, பெண்களுக்கு, ஆண்களுக்கு என்று தனித்தனியாக நம் அந்தண ஸமூக சிறப்பு அம்சங்கள், குழந்தை வளர்ப்பு, பெற்றோர் கடமையும், பொறுப்பும், இன்றைய கால கட்டத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் குறித்தும் வகுப்புகள் தனித்தனியே நடத்தினார்கள். 150க்கும் மேற்பட்ட பெரியவர்களும், பெண் குழந்தைகளும் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். நிறைவாக அமுத சுரபி ஆசிரியர் திருப்பூர் ஸ்ரீ கிருஷ்ணன் தனது உரையில் பெற்றோர் மேன்மை, நம் தேச பெருமை குறித்தும் பேசி எல்லோருக்கும் நல்ல சிந்தனையை கொடுத்தார்கள். கோவை வேதபாரதி கிளை சார்பில் திருப்பூர் ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ சந்திரசேகர் ஜி, டாக்டர் ஸ்ரீமதி ஷ்யாமா, ஸ்ரீமதி காந்தலெட்சுமி சந்திரமௌலி, ஸ்ரீமதி காந்தாமணி ஆகியோர்களுக்கு மரியாதையும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

ஆசிரியர்.

சென்ற மாத இதழில் 12ம் பக்கத்தில் 'இந்தவருடம் பீஷ்மாஷ்டமி 12.02.2019 செவ்வாய்கிழமை என்பதற்கு பதிலாக சனிக்கிழமை என்று தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். தவறை தொலைபேசி மூலம் சுட்டிக்காட்டிய வேளச்சேரி வாசகிக்கு நன்றி. ஆசிரியர்.



# 10-வது ஹிந்து ஆன்மீக கண்காட்சியில் வேதபாரதியின் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குங்கும அர்ச்சனை

10வது ஹிந்து ஆன்மீக மற்றும் சேவை கண்காட்சி 29.01.2019 செவ்வாய்கிழமை அன்று துவங்கியது. துவக்க விழா வேளச்சேரி குருநானக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அது சமயம் வேதபாரதி அமைப்பின் ஏற்பாடுகளில் முக்கியமாக வேளச்சேரி, பள்ளிக்கரணை, ஆதம்பாக்கம், மடிப்பாக்கம், தரமணியில் உள்ள முக்கிய கோவில்களின் சேவார்த்திகள் 1008 பேர் அமர்ந்து உலக நலனுக்காக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பூஜை, குருநானக் கல்லூரி ஆடிடோரியத்தில் மதியம் 2.45 முதல் 5.00 மணி வரை நடைபெற்றது. வேளச்சேரி தண்டீஸ்வரர் கோவில் ஸ்ரீ குமாரசாமி சிவாச்சார்யார் அவர்களும் ஸ்ரீ ஸத்வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட் நிறுவனர் ஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள் அவர்களும் வெகு சிறப்பாக பூஜைகளை நடத்திக் கொடுத்தார்கள். சோடஜோ உபசாரங்கள் ஸ்ரீ தண்டீஸ்வர ஸ்வாமிக்கும், அம்பாளுக்கும் நடைபெற்றது.

விழாவின் முத்தாய்ப்பாக காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் வருகை தந்து ஸ்வாமி தரிசனம் செய்து சிறப்பித்து அன்பர்களுக்கெல்லாம் தரிசனம் தந்து மக்கள் மனம் குளிர விழா சிறப்பாக நடந்தது. எல்லோருக்கும் பூஜை சாமான்கள், பிரசாதம் கமிட்டியாரால் வழங்கப்பட்டது. வேளச்சேரி சிவத்திரு குமாரராஜா சீரிய முயற்சி எடுத்தார்கள். வேதபாரதி அன்பர்களும், மகளிர் குழுக்களும் பம்பரமாக சுழன்று பணியினை நேர்த்தியாக செய்தார்கள். எல்லோரும் நலமுடனும், வளமுடனும் வாழப்பிரார்திக்கிறோம்.





# ஸ்ரீ மாதா டிரஸ்ட்



**2000ம் ஆண்டு முதல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் ஏழை புற்றுநோயாளிகளின் ஒரே புகலிடம்**

V.கிருஷ்ணமூர்த்தி
நிர்வாக அறங்காவலர்

P.ஆகாஷ்ராம்
செயல் அறங்காவலர்

அடையாறு கேன்சர் மருத்துவமனையுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அருளாணைப்படி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு சிகிச்சைபெற வெளியூர்களிலிருந்து வரும் ஏழை புற்று நோயாளிகளின் தேவையை சிகிச்சை காலம் முடியும் வரை **முற்றிலும் இலவசமாக** பூர்த்தி செய்து வருகிறது. இது தங்களது நிதியுதவி மற்றும் பேராதரவினால் மட்டுமே நடத்த முடிகிறது.



அடையார் புற்று நோய் ஆஸ்பத்திரி ஒரு தனி உலகம். ஆம், கொடிய நோய் மட்டுமல்ல, அதைவிட கொடிய சிகிச்சையும் கூட. இத்தகைய சோதனைக்கு உள்ளான துர்பாக்கியசாலிகளுக்கு நம்பிக்கையும் உதவியும், இருக்க இடமும், உண்ண உணவும் தருவதை ஓர் ஒப்பற்ற தர்மகாரியமாக, காஞ்சி காமகோடி மகாபெரியவர் ஆணையை ஏற்று, பரமபக்தியுடன், இம்மாபெரும் கைங்கர்யத்தை எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஸ்ரீ மாதா டிரஸ்ட் மூலம் செய்துவருவது போற்றுதலுக்கும், புகழுக்கும் அப்பாற்பட்ட, உத்தம பணியாகும். பகவானும், மகாபெரியவாளும் திரு.கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கும், அவருக்கு துணையாக பணியாற்றி வரும் அன்பர்களுக்கும் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அளிக்க எம்பெருமானை வேண்டுகிறேன். **திரு.ஏ.எம்.இராஜகோபாலன்** ஆசிரியர், குமுதம் ஜோதிடம்



ஒரு சமூக சேவை நிறுவனத்திற்குள் நுழையும் போது ஓர் ஆலயத்திற்குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்படுமானால், அதுவே அந்த நிறுவனம் மிகச்சிறப்பாக இயங்கி வருகிறது என்பதற்கு சாட்சி. ஸ்ரீ மாதா டிரஸ்ட் உள்ளே காலடி வைத்த போது அத்தகைய புனித உணர்வைத்தான் அடைந்தோம். கால்கள் தாமாகவே செருப்பைக் கழற்றி ஓர் ஓரமாக வைத்தன.

டாக்டர் **திருப்பூர் கிருஷ்ணன்**, ஆசிரியர், அமுதசுரபி



ஸ்ரீ மாதா டிரஸ்ட் இன்று பார்வையிடலாயிற்று. இங்கு தங்கி இருக்கும் நோயாளிகளை தங்கள் பிள்ளை போல, தாய் தந்தை போல பாவித்து பராமரிப்பது உயர்வானது, உன்னதமானது, சிறப்பானது. இப்பணி யாராலும் செய்ய முடியாதது, இதை ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி சிறப்பாக நடத்துகின்றார்.

**முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான்**, தருமபுரி ஆதீனம்.



SANDEEP RAI RATHORE, IPS, Additional Director General of Police, TN-STF

Visited this very worthy Institution today. The work being done by Sri Matha Trust is in service of humanity and beyond words. The cause is inspiring and humbling. Have learnt a lot today and would carry the virtue. Gob Bless. Jai Hind.

Justice **K.Ravichandrababu**, Chennai - 20.

சிறந்த மனித நேயமிக்க தொண்டு. இந்த மக்கள் சேவையே மகேசன் சேவை. என்றென்றும் தொடர எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகிறேன்.



எதிர்காலத்தைப் பற்றி ஓர் நம்பிக்கை இங்கு வந்த பிறகு உறுதிப்படுகிறது. மோசமான ஒரு சூழ்நிலை வெளி உலகில் தென்பட்டாலும், இதுபோல நல்ல உள்ளங்கள் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் தொண்டு புரிவது நமக்கும் ஊக்கம் தருகிறது.

**இல.கணேசன்**, மாநிலங்களவை உறுப்பினர்



மனதுக்கு நிறைவு தரும் அருமையான இடம். திரு.கிருஷ்ண மூர்த்தியின் சேவை அளவிட முடியாது. நோய் நொடியில்லாமல் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நூறாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறேன். **டெல்லி கணேஷ்**, திரைப்பட நடிகர்



தர்மத்தை நீ காப்பாற்றினால் தர்மம் உன்னைக் காப்பாற்றும் என்பது கீதையில் பகவான் சொன்னது. மாதா டிரஸ்ட் சேவை மகத்தானது. இது மேலும் வளர வேண்டும் என்று கடவுளை ப்ரார்த்திக்கிறேன்.

**துக்ளக் சத்யா**, மடிப்பாக்கம்



உள்ளதை கொடுப்பது தர்மம். உள்ளதையெல்லாம் கொடுப்பது தானம். உள்ளதையும் உள்ளத்தையும் கொடுப்பதுதான் மனித நேயம். இந்த தர்மசாலாவில் இதை கண்கூடாக பார்க்கிறேன்.

**உரத்தசிந்தனை உதயம் ராம்**, சென்னை



திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தொண்டு அற்புதமானது. இது ஒரு பெரிய தவம். **ம.வீரபாகு**, ஆசிரியர் - விஜயபாரதம்



வாழ்வதற்கு பொருள் வேண்டும் என எதிர்பார்க்கும் இந்த உலகில், வாழ்வதிலும் பொருள் வேண்டும் என்று நம்புகிற ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகி திரு.கிருஷ்ணமூர்த்தி, பொருள்மிகு வாழ்க்கை வாழ்கிறார். இங்கு உள்ளோரை சந்தித்தது புதிய அனுபவம். உள்ளம் நெகிழ்ந்தது.

**லேனா தமிழ்வாணன்**, படைப்பாளர், சென்னை



தினமும் ஓர் உயிர்க்கு நல்லது செய்தால் எப்பவும் ராஜாவாக இருக்கலாம் என்று என் அம்மா சொல்வார்கள். கிருஷ்ணமூர்த்தி ஐயா தினமும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு நல்லது செய்கிறார். அவர் ஒரு சக்கரவர்த்தி. பாலம் **கல்யாணசுந்தரம்** பத்திரிகையாளர், சமூக சேவகர்

## நம் தேசம் காக்க இன்னுயிர் கொடுத்த நம் ராணுவ வீரர்களுக்கு வேதபாரதியின் வீரவணக்கம்! வீரவணக்கம்!!

## பயங்கரவாதத்தை வேரறுக்கும் நேரமிது.





**16.02.2019,** சனிக்கிழமை நங்கநல்லூரில் அஞ்சலி செலுத்தப்பட்டது. நம் வேதபாரதி அன்பர்களும் கலந்து கொண்டனர்.

**என்றும் தேசப்பணியில் L.முனீஸ்வர சாஸ்திரிகள், ஸ்தாபகர் ஸத்வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை**



## பங்குனி உத்திரம்

இந்துக்களாகிய நாம் எல்லோரும் வருடம் முழுவதும் மாதா மாதம் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேலும் பண்டிகைகளைக் கொண்டாடி வருகிறோம். இந்த பண்டிகை நாட்களை நாம் புனித நாட்களாக கருதுகிறோம். சற்று கூர்ந்து கவனித்தால் பெரும்பாலான பண்டிகைகள் அமாவாசையிலும், பௌர்ணமியிலும் நிகழ்கின்றன. இந்த இரண்டு நாட்களையும் நம் முன்னோர்கள் புனித நாட்களாக கருதி அந்த நாட்களில் இறைவனிடம் மனதைச் செலுத்த விரதநாட்களாகவும் ஆக்கினார்கள். அப்படி விரதம் இருக்க வேண்டுமானால் நம் உடல் பலமும் மனதில் சக்தியும் வேண்டும். விஞ்ஞான பூர்வமாக பார்த்தால் அமாவாசையன்று பூமி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்றும் நேர் கோட்டில் வருவதால் அந்த நாளில் பூமியின் ஆகர்க்ஷண சக்தி அதிகமாக இருக்கும். அமாவாசைக்குப் பிறகு நிலவு சிறிது சிறிதாக வளர்ந்து பௌர்ணமி அன்று முழு நிலவு வானில் தோன்றும். அன்று பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் வரும் அன்று மனித உடலுக்கு சக்தி அதிகமாக இருக்கும். பௌர்ணமி அன்று கடலுக்கும் சக்தி அதிகமாகி கடல் அலைகள் வழக்கத்தைவிட அதிகமாக பொங்குவதை நாம் கண்கூடாக காண்கின்றோம். விஞ்ஞான ரீதியாக மட்டுமல்லாமல் ஆன்மீக ரீதியாகவும் பௌர்ணமி மிகவும் சிறப்பு வாய்ந்த முக்கிய நாளாக கருதப்படுவதால் மாதாமாதம் ஒவ்வொரு பௌர்ணமியும் ஒரு பண்டிகையாக கொண்டாடும்படி நம் முன்னோர்கள் வைத்துள்ளார்கள். மாதாமாதம் பௌர்ணமி ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்திலேயே வரும். அந்த நாட்களில் கொண்டாடப்படும் பண்டிகைகள் பெரும்பாலும் அந்த நட்சத்திரத்தின் பெயரிலேயே வருவதைக் காணலாம்.



"பங்குனி" மாதத்தில் "உத்திரம்" நட்சத்திரம் வரும் நாள் "பங்குனி உத்திரம்" பனிரெண்டு பௌர்ணமி விழாக்களும்

சிவபெருமானனுக்கு உரிய விசேஷ நாட்களாக இருந்தாலும் வைகாசி விசாகம் திருக்கார்த்திகை, தைபூசம், பங்குனி உத்திரம் முதலான நாட்களில் முருகனுக்குரிய சிறப்பான திருவிழாக்களாக கொண்டாடப்படுகின்றன.

பங்குனி உத்திர நாளில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் :

அன்னை பார்வதி தேவி பரமசிவனை மணந்த நாள். இந்த நாளில் அனேக சிவன் கோயில்களில் பிரம்மோத்ஸவமும் திருக்கல்யாணமும் நடைபெறும். சிவன் கோயில்களில் பசும் தயிரால் அபிஷேகம் செய்வார்கள்.

முருகன் தெய்வயானை விவாஹம் நடைபெற்ற நாள் இன்று முருகனுக்கு சிறப்பு விரத தினமாக கொண்டாடப்படுகிறது. திருச்செந்தூர் கோயிலில் ஐராவத மண்டபத்தில் 108 சிவலிங்கங்கள் சாட்சியாக வள்ளி முருகன் விவாஹம் சிறப்பாக நடைபெறும்.

மேலும் மீனாட்சி-சுந்தரேஸ்வரர், ஸ்ரீ ஆண்டாள்-ஸ்ரீரங்கநாதர், மையிலை கற்பகாம்பாள்-கபாலிஸ்வரர், ஸ்ரீராமர்-சீதை, சாவித்திரி-சத்தியவான், இந்திராணி-தேவேந்திரன், பிரம்மா-சரஸ்வதி ஆகியோர் விவாஹங்கள் நடைபெற்ற நாள்.

எல்லா கோயில்களிலும் தெய்வங்களின் திருமண உத்சவங்கள் நடைபெறும். நல்ல மணவாழ்க்கை வேண்டுவோர் இந்த நாளில் சிவ பார்வதியை வேண்டி விரதம் மேற்கொள்வார்கள். ஸ்ரீமஹாலஷ்மி, இந்நாளில் விரதம் இருந்து மஹாவிஷ்ணுவின் திருமார்பில் இடம் பிடித்தாள் என்பது ஐதீகம். பிரம்மன் தன் மனைவி சரஸ்வதியை நாக்கிலே வைத்துக் கொள்ளும்படியான வரத்தைப் பெற்றார். இந்திராணியை பிரிந்திருந்த இந்திரன் மீண்டும் அவளுடன் ஒன்று சேர்ந்த நாள்.

ரதி தேவியின் வேண்டுகோளின்படி பார்வதி தேவி ஸ்ரீசிவனின் அனுமதியுடன் இறந்த மன்மதனை மறுபடியும் உயிர் எழுச்செய்த நாள்.

ஸ்ரீ ஐயப்பன் அவதரித்த நாள். குந்தியின் மகனாக அர்ஜுனன் பிறந்த நாள்.

பங்குனி உத்திர நாளன்று அனுஷ்டிக்கும் விரதத்தை 'திருமண விரதம்' என்பார்கள். திருமணம் ஆகாத பெண்கள் விரதம் இருந்தால் பக்தியுள்ள கணவன் கிடைப்பான் என்பது ஐதீகம். இன்றைய தினம் குலதெய்வங்களை வழிபட உகந்த நாளாக கருதப்படுகிறது. ஆகையால் எல்லோரும் நம்முடைய குல தெய்வ கோயில்களுக்குச் சென்று வழிபட்டு நம்முடைய மூதாதையர்களின் ஆசிகளைப் பெறுவோமாக.

இந்தவருடம் “பங்குனி உத்திரம்” - 21.03.2019 வியாழக்கிழமை.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



# ‘யுவஸ்ரீ’ மந்தைவெளிப்பாக்கம்

கல்யாண்நகர் அசோசியேஷன் மற்றும் வேதபாரதி இணைந்து 26.01.2019 சனிக்கிழமை அன்று சென்னை மந்தைவெளிப்பாக்கம் கல்யாண்நகர் அசோசியேஷன் ஹாலில் யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம் நிகழ்ச்சி வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மதியம் 2.00 மணி முதல் குழந்தைகள் பதிவு செய்து கொண்டு அரங்கத்திற்கு வர ஆரம்பித்தார்கள். 72 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். கல்யாண்நகர் அசோசியேஷன் ஸ்ரீமதி ராஜேஸ்வரி மற்றும் குழுவினர்கள் பள்ளிக் குழந்தைகளை பேச்சுப் போட்டிக்கு வர முழு பயிற்சி கொடுத்தார்கள். கல்யாண் நகர் அசோசியேஷன் மகளிர் குழு எடுத்த விடா முயற்சியால் பெண் குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். 2.30 மணிக்கு இறைவணக்கம் செய்து, பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் ஜி குழந்தைகளுக்கு விளையாட்டுகள் மூலம் நம் கலாச்சார மாண்பினை தெரிவித்து, உடல் மனம் குறித்து வகுப்பு நடத்தினார்கள். பெண் குழந்தைகள் வயது வாரியாக குழுக்கள் பிரிக்கப்பட்டு, வேளச்சேரி ஸ்ரீமதி சிவசங்கரி மற்றும் நங்கநல்லூர் ஸ்ரீமதி ஷோபனா ராமன் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு வகுப்பு நடத்தினார்கள். தேநீர் இடைவேளைக்குப்பின் கலைமாமணி விருது பெற்ற ஒப்பற்ற கலைஞர் பல்துறை வித்தகர் ஸ்ரீமதி ரேவதி சங்கரன் வருகை தந்து குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் நம் பாரத கலாசார மாண்பு, பெண் குழந்தைகள் மேற்கத்திய கலாச்சாரத் தாக்குதலிலிருந்து விடுபடவும் நம் தேச பெருமையை உணர்ந்திடவும் பெருமைகளை எடுத்துச்சொல்லி, மிக அற்புதமாக தனது கருத்துக்களை பதியவைத்தார்கள். குழந்தைகளும், பெற்றோர்களும் திருமதி.ரேவதி சங்கரன் அவர்களின் கருத்துக்களை ஏற்று புதிய சிந்தனை பெற்றார்கள். பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தன்னலமற்ற சேவை மூலம் நல்ல மனிதர்களை சந்திப்பது, மனநிறைவை அளித்தது. குறிப்பாக வேதபாரதி பெண்குழந்தைகள் தனது தன்னார்வ பணியின் மூலம் புதிய அத்தியாயத்தை துவக்கி வைத்துள்ளார்கள்.

-ஆசிரியர்.

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி** பாகம் - 2 பகுதி - 31

பயம் என்னும் உணர்ச்சி உடலில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று மருத்துவ விஞ்ஞானம் கூறிக் கொண்டேயிருக்கிறது. மனோதத்துவ ஆசான்கள் 'அச்சம்' என்பது அறிவிலும், ஆற்றலிலும் மனதிலும் எத்தகைய உணர்வுகளை ஏற்படுத்துகிறது என்று கூறிக் கொண்டேயிருக்கிறார்கள். பயத்தினால் கேடு மட்டுமல்ல நன்மைகளும் பல உண்டு.

ஒரு மனிதனிடம் தோன்றும் பய உணர்வு தான் அவனை இச்சமூகத்தில் ஒழுங்காக இருக்க உதவுகிறது. அது மட்டுமல்ல, தான் பிறந்து வாழும் வீடு, தன்னைச் சுற்றியுள்ள உணவு, சமுதாயம் ஆகியவற்றோடு ஒட்டி வாழச் செய்கிறது.

சமுதாயத்துடனும், உறவிடமும் அவன் கொள்ளும் ஒட்டுதல் அவன் நல்லுறவை வளர்க்கின்றது. அவனை அவர்களோடு இணைந்து வாழ உதவுகிறது.

இந்த நல்லுறவு அவனை 'அறம்' செய்யத் தூண்டுகிறது. யாராவது உதவி என்று கேட்டால் உடனே செய்யத் தூண்டுகிறது. கூப்பிட்ட குரலுக்கு உதவுவது என்பது நம்பிக்கைகளை வளர்க்க உதவுகின்றது.

இதையெல்லாம் படித்து உங்களால் நம்ப முடிகிறதா?

பயம் ஒரு மன உணர்ச்சி, அதனால் எதிர்மறை சிந்தனைகள் தோன்றி, பயம், மன உளைச்சல், மன அழுத்தம் ஏற்பட்டு, எப்பணியையும் செய்ய இயலாமல் அவன் தவிப்பதும், அனைவருக்கும் புரியும்.

இப்பொழுது முதலில் எழுதியிருப்பதைப் படியுங்கள். உங்களுக்குப்புரியும்.

'பயம்' என்பதை இருட்டோடு ஒப்பிட்டால், அதைப் போக்க 'அன்பு' எனும் தீபத்தை ஏற்றி ஒளியேற்ற வேண்டும் என்று கவிதை வடிவில் கூறினாலும், பெற்றோர்கள் ஒன்றை உணர வேண்டும்.

'அன்பு' மட்டுமே நேர்மறை எண்ணங்களைத் தோற்றுவிக்கும். 'பயம்' என்பது எதிர்மறை எண்ணங்களையும் தோற்றுவிக்கும் என்று புரிந்து கொண்டு செயல்பட்டால் போதும்.



"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை"

(குறள் - 131 அதிகாரம் - ஒழுக்கமுடைமை)

உடல் வருந்தினாலும், கருத்துடன் ஒழுக்கம் எனும் நன்னடத்தையை வளர்க்க வேண்டும். எத்தனை படித்தாலும், ஆராய்ச்சிகள் செய்தாலும் நல்லொழுக்கம் தான் ஒருவனுக்கு துணைபுரியும் என்கிறார் வள்ளுவர் பெருமான்.

இன்று பெற்றோர்களிடம் இருக்கும் ஒரே எண்ணம் என் மகன் / மகள் மட்டுமே வகுப்பில் முதலாவதாக இருக்க வேண்டும். இதன் வெளிப்பாடு எத்தகைய பயத்தை சிறுவர், சிறுமிகளிடம் தோற்றுவிக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

அதனால் இத்தொடரில் பல பெற்றோர்கள் எதிர்பார்க்கும் பரீட்சை பயத்தை சிறிது காணலாம்.

பரீட்சை பயம் வீட்டில் அனைவரிடமும் ஒருவித பயம் தோற்றுவிக்கும், செயல்கள் பிறழ்ந்து, கைகள் நடுங்க, மனம் பதற ஒரு பரீட்சையை அணுகுவது சரியா?

4வது அல்லது 5வது வகுப்பிலிருந்தே தேர்வு என்பது உண்டு. அதைத் தவிர்க்கவே முடியாது என்று ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் நன்கு தெரியும்.

குழந்தைகளுக்கு அது எதுவுமே தெரியாது என்பது போலவும், நாம் தான் அடிக்கடி பரீட்சையை பூதமாக்கி, அவர்கள் முன் நிறுத்தினால் தான் அவர்களுக்கு புரியும் என்று பெற்றோர்கள் எண்ணுகிறார்கள்.

90% மார்க் என்று கூத்தாடும் பெற்றோர்களில் எவ்வளவு பேர் தங்கள் 10வது அல்லது 12வது வகுப்பில் 90% மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்.

40% மார்க் வாங்குகிற மாணவன் அடுத்த தேர்வில் 45%-50% மார்க் தான் வாங்க இயலும். ஆனால் அதற்குள் அவன் "உருப்படாதவன், மாடு மேய்க்கத்தான் லாயக்கு, தெருவில் பிச்சை எடுப்பே, சாப்பாட்டு ராமன், அவனைப் பார், இவனைப்பார்" என்று அர்ச்சனை செய்வதை நிறுத்துங்கள்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

(குறள்-423 அதிகாரம் - அறிவுடைமை)

எந்தப் பொருளைப் பற்றி யார் யார் எப்படியெல்லாம் கூறினாலும், அவற்றை கேட்டு, அவற்றினுள் எது உண்மை என்று கண்டு கொள்ளச் செய்வது தான் அறிவு என்கிறார் திருவள்ளுவர்.

இதை யோசித்துப் பாருங்கள். அடுத்த மாதம் பேசுவோம்.

தொடரும்....

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி.**

# தர்மத்தின் குரல்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.13. அடுத்த பிறவிக்குக் கர்மாக்களின் மாற்றம்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

அந்த இறுதி நிலையிலேயே அது நிலைத்து விடுகிறது. அது பிராண விருத்தி எனப்படும். இது ஜீவாத்மாவுக்குள் நுழைகிறது. அப்பொழுது, சுற்றியுள்ளவர்கள் அவர் இன்னும் உயிருடன் உள்ளார். உடலில் இன்னும் உஷ்ணம் உள்ளது என்று சொல்கிறார்கள். பிறகு, வாக்விருத்தி, மனோ விருத்தி, பிராண விருத்தி ஆகியவற்றைத் தன்னுள் இழுத்து அடக்கிக் கொண்ட ஜீவாத்மா, அந்த உஷ்ணத்திற்குள் தன்னை மூடிக் கொண்டு உடலின் ஒன்பது துவாரங்களில் ஒன்றின் வழியாக, உடலை விட்டு வெளியேறுகிறது. அப்பொழுது உடல் இறந்து, சில்லிட்டுப் போகிறது.

அடுத்த பிறவியில் ஒரு உடல் உருவாவதற்கு இந்த மூன்று விருத்திகளுமே அடிப்படை. உதாரணமாக, விருத்திகளை ஒட்டியே, அடுத்த பிறவியில், ஒருவனின் மனோவாக்கு காயம் ஆகியவற்றின் நிலைகள் அமையும். ஒருவன் ஊமையா, திக்குவாயுடையவனா, சாதாரணமாகப் பேசுகிறவனா, சிறந்த மேடைப் பேச்சாளனா அல்லது மௌனியா என்பனவற்றை வாக்விருத்தி நிர்ணயிக்கிறது. மனோவிருத்தியைப் பொருத்து ஒருவன் மனநோயுள்ளவனாகவோ, சஞ்சல புத்தியுள்ளவனாகவோ, மந்த புத்தியுள்ளவனாகவோ, சாதாரண அறிவுள்ளவனாகவோ, உயர்ந்த அளவினதான மன ஒருமுனைப்புடையவனாகவோ, சந்தாஷமுள்ளவனாகவோ, துக்கமுள்ளவனாகவோ பிறக்கிறான். அவ்வாறே அவனின் பிராண விருத்தியை ஒட்டி அவன் பெண்ணாகவோ, ஆணாகவோ, அலியாகவே, நோயாளியாகவோ, ஆராக்கியமானவனாகவோ, பருமனாகவோ, ஒல்லியாகவோ இன்னும் வேறு விதமாகவோ பிறப்பெடுக்கிறான்.

இந்த விருத்திகளைச் சுமக்கும் ஜீவாத்மா, தான் செய்த சில சிறப்பான அல்லது முக்கியமான புண்ணிய, பாபச் செயல்களின் விளைவாக ஸ்வர்கத்திற்கோ, நரகத்திற்கோ செல்லும். அந்த முக்கிய கர்ம பலன்களை அனுபவித்துவிட்ட பின், அவன் பூமிக்கே திரும்புகிறான். முக்கியம் எனச் சொல்லக்கூடிய வகையில் புண்ணியங்களோ பாவங்களோ செய்யப் பட்டிருக்க வில்லையென்றால், அவன் ஸ்வர்கத்திற்கோ, நரகத்திற்கோ செல்வதில்லை. எப்படியாயினும் பூமிக்கு வரும்போது, மழைத்துளிகள் மூலமாகப் புவியை அடைகிறான். பிறகு ஏதாவதொரு உணவு தானியத்திற்குள் நுழைகிறான். இப்பொழுது கடவுளின் பங்கு வருகிறது.



அந்த ஜீவாத்மா, ஏற்ற தந்தையினுள் போய்ச்சேர கடவுள் ஏற்பாடு செய்தாக வேண்டும். அந்த உரிய தந்தை, அந்த ஆத்மாவை ஏற்றுக் கொள்ளும் நிலையை இன்னும் அடையாமலிருக்கலாம். இதற்கிடையில் வேறு ஒரு மிருகம், அந்த ஆத்மா புகுந்த தானியத்தை உட்கொள்ள நேரிடலாம். ஜீரணமான பிறகு அந்த ஜீவாத்மா, அந்த விலங்கின் மலம், சிறுநீர் அல்லது வேறெதன் மூலமாகவோ வெளியேறி, இன்னுமொரு உணவு தானியத்துள் புகும். அந்த ஜீவாத்மாவுக்குத் தகுதியான தந்தை அதை ஏற்கத் தயாராயிருக்கும் வரையில், இம்முறை தொடர்ந்து கொண்டேயிருக்கும். அத்தந்தை அந்த உணவு தானியத்தை உட்கொண்டு, அது ஜீரணமாகிறபோது, அதில் உள்ள ஜீவாத்மா அவனுடைய தாதுவை அடைந்து அதிலிருந்து தாயின் கருப்பையை அடைகிறது. இதன்பின் நிகழும் உடல் மனரீதியான நிலைகளுக்கான காரணங்கள் பற்றி விஞ்ஞானம் சொல்லுவதெல்லாம் சாஸ்திரத்திற்கு ஏற்புடையதே. ஜீவன்களிடையே ஏன் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை சாஸ்திரம் இவ்வாறு விளக்குவதைக் காணலாம்.

தொடரும்....

**குறிப்பு :**

**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**

**- வேதபாரதி**

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



மஹாபெரியவா முக்காலமும் அறிந்த பரமேஸ்வரன் பெரியவாளுடன் அனேகம்பேருக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. தம்முடைய அடியவர்களின் வாழ்வில் நடக்கப்போவதை, நடந்ததை தம்முடைய ஞானதிருஷ்டியால் அறிந்து அவர்களை கடாக்ஷித்தவர். அதே போல் பலருக்கும் எழுந்த பலவிதமான சந்தேகங்களை யாராலும் விளக்க முடியாத சந்தேகங்களை எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் அற்புதமாக விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட சந்தேகங்களையும் அதற்கு மஹாபெரியவா அளித்த அற்புத விளக்கங்களையும் மாதம் ஒரு விளக்கத்தை நம் வாசகர்களுக்காக இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம். இது பலருக்கும் அறிந்திருக்கும் இருப்பினும் தெரியாதவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த பகுதி.

### (3) முதல் வாய்ஸ் ரிக்கார்டர்

1950-ல் ஒரு நாள் ஒரு வானொலி நிருபர் ஒருவர் ஸ்ரீமஹாபெரியவாளை பேட்டி எடுத்துக் கொண்டிருந்தார். பேட்டியின் நடுவே ஸ்ரீ மஹாபெரியவா பேட்டி எடுப்பவரிடமும் அங்கு இருந்தவர்களிடமும் "முதல் வாய்ஸ் ரிகார்டர் எது என்று யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார். யாருக்கும் பதில் தெரியவில்லை. அடுத்து மஹா பெரியவா "விஷ்ணு ஸஹஸரநாமம் நமக்கு எப்படி கிடைத்தது? என்று கேட்டார். இதற்கு பலரும் ஏகோபித்த குரலில் "ஸ்ரீ பீஷ்மர் நமக்கு தந்தார்" என்றார்கள். ஸ்ரீமஹா பெரியவா சிரித்துக்கொண்டே அடுத்ததாக "பீஷ்மர் சொன்ன ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை எழுதியோ அல்லது குறிப்பெடுத்தோ கொடுத்து யார்? என்று கேட்டார். யாரும் பதில் சொல்லவில்லை.

ஸ்ரீமஹாபெரியவா புன்சிரிப்போடு விளக்கம் சொல்ல ஆரம்பித்தார்:

பீஷ்மர், ஸ்ரீகிருஷ்ணரின் புகழையும், பெருமைகளையும், விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தால் விளக்கிக் கொண்டிருந்தபோது, ஸ்ரீகிருஷ்ணர், வியாஸர் உட்பட அனைவரும் வேறு எந்த நினைப்பும் இன்றி பீஷ்மரையே உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர். பிதாமஹர் பகவானின் ஆயிரம் நாமாக்களையும சொல்லி முடித்த பின்பு அனைவரும் வியப்படைந்தனர். அப்போது அங்கிருந்த



யுதிஷ்டிரர் "ஸ்ரீவாசுதேவரின் ஒப்பற்ற பெருமை வாய்ந்த ஆயிரம் புனித நாமாக்களைச் சொன்ன போது அவற்றை குறிப்பெடுக்கவோ, எழுதிக் கொள்ளவோ தவறிவிட்டோமே. அதனால் நாம் அற்புதமான விஷயத்தை இழந்து நிற்கிறோம்" என்றார். அப்போதுதான் அனைவரும் எப்படிப்பட்ட தவறு நேர்ந்துவிட்டது என்று உணர்ந்தனர். பிறகு யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரிடம் "ஆயிரம் புனித நாமாக்களை மீட்டுத்தர தாங்களாவது உதவக்கூடாதா? என்று கேட்டார் ஸ்ரீகிருஷ்ணர் "என்னால் மட்டும் என்ன செய்ய முடியும்? நானும் உங்களைப்போல ஆச்சார்யர் பீஷ்மரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்றார். இதைக்கேட்ட அனைவரும் "ஹே வாசுதேவா நீர் அனைத்தும் அறிந்தவர் உம்மால் இயலாதது ஏதும் இல்லை. தயைகூர்ந்து எங்களுக்கு உதவ வேண்டும். பரந்தாமனின் ஆயிரம் நாமாக்களை மீட்டுத்தர வேண்டும். அது தங்களால் மட்டுமே முடியும்" என்று வேண்டினர்.

அதற்கு ஸ்ரீகிருஷ்ணர் "இதைச் செய்ய முடிந்தவர் ஒருவர் உங்களுக்குள்ளேயே இருக்கிறார்" என்றார். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஸ்ரீவாசுதேவரே தொடர்ந்தார் "ஸஹாதேவன் அதனை மீட்டுச் சொல்ல வியாசர் எழுதுவார்" என்றார். அனைவரும் ஸஹாதேவனால் எப்படி முடியும் என்று அறிய ஆவலாக இருந்தனர். ஸ்ரீ கிருஷ்ணர் "உங்கள் அனைவருள்ளும் ஸஹாதேவன் மட்டுமே "சுத்த ஸ்படிக" மாலை அணிந்திருக்கிறான் ஸஹாதேவன். சிவபெருமானை பிரார்த்தனை செய்து தியானித்து "சுத்த ஸ்படிகம்" உள்வாங்கியுள்ள ஸஹஸ்ரநாமத்தை சப்த அலைகளாக மாற்ற, அதை வியாஸர் எழுதிக்கொள்வார்" என்றார்.

"சுத்த ஸ்படிகம்" அமைதியான சூழ்நிலையில் எழும் சப்தங்களை கிரகித்துக்கொள்ளும். இது ஸ்படிகத்தின் குணம். தன்மை ஸ்வேதம்பரராகவும், ஸ்படிகமாகவும் இருக்கும் சிவபெருமானை தியானித்து அந்த சப்தங்களை மீட்கமுடியும்.

உடனே ஸஹாதேவனும் வியாஸரும், பிஷ்மர் ஸஹஸ்ரநாமம் சொல்லிய அதே இடத்தில் அமர்ந்தனர். சகாதேவன் மகாதேவரை ப்ரார்த்தித்து, தியானம் செய்து ஸஹஸ்ரநாமத்தை மீட்கத் துவங்கினார்.

அந்த சுத்த ஸ்படிக மாலையை உலகின் முதல் வாய்ஸ் ரெக்கார்டறாக அற்புதமாக ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை நமக்கு தந்தது என்று சொல்லிவிட்டு சிரித்தார் ஸ்ரீமஹாபெரியவர்.

ஸ்ரீமஹாபெரியவா சரணம்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

# 'உலக மகளிர் தினம்' - சிறப்புக் கட்டுரை

## அன்னை சாரதா என்ன சொல்கிறாள்?

*மார்ச் மாதம்! உலக மகளிர் தினம்!*

அன்றைய தினத்தில் பாரத தேசத்திற்குப் பெருமை சேர்த்தவரும், அனைத்து உலகத்தினரும் போற்றுபவரும், அன்பே உருவானவருமான அன்னை ஸ்ரீ சாரதா தேவியைப் பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். எத்தனையோ மாதரசிகள் இருக்க, ஏன் அன்னை சாரதா?

சமீபத்தில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒரு அன்பு இல்லத்தில், அந்தக் குழந்தைகள் மனம் உருகிப் பாடிய பாடலே இந்தக் கட்டுரையின் காரணம். என்னையும் சேர்த்து, என்னுடன் வந்திருந்த அனைவரும் கண்ணீர் பெருக்கிய அந்தப் பாடல் வரிகளை அன்பு இல்லத்தின் தலைவர் திரு. இரா.கௌதமன் எளிமையான மனம் உருக்கும் வரிகளில், மயிலிறகின் வருடலைப் போன்ற ராகத்தில், முன்னெடுத்துப் பாட, குழந்தைகள் அனைவரும் கண்களை மூடி, ஆழ்ந்த ஈடுபாட்டுடன் 'அன்னை சாரதா என்ன சொல்கிறாள்? அன்பின் வழியிலே வாழச் சொல்கிறாள்..! என்று பாடியதும், வந்திருந்தவர்கள் அனைவருமே கண்ணீர் பெருக்கிவிட்டனர். பாடலைக் கேட்டதற்கே இத்தகைய உணர்வு என்றால், அன்னையின் அன்பை நேரடியாக அனுபவித்தவர்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கும்!

வங்க தேசத்தின் குக்கிராமமான ஜெயராம்பாடியில் ஏழ்மை நிறைந்த பிராமண சமூகத்தில், 1853ம் வருடம், டிசம்பர் மாதம், 22ம் நாள் பிறந்த பெண் குழந்தை தாகூர்மணி இவள்தான் பின்னர் உலகம் போற்றும் தெய்வீக அன்னை ஸ்ரீ சாரதாதேவியாக விளங்கப்போகும் தெய்வக் குழந்தை என்று அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஒரே சமயத்தில் அவளது பெற்றோர்கள் இருவருக்குமே, தங்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் மூலம் தங்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, இந்த உலகத்திற்கே நல்ல காலம் பிறக்கப்போகிறது என்கிற தெய்வீக தரிசனம் கிடைத்தது என்பது வியப்பிற்குரிய விஷயம்.

அவள் வித்தியாசமாகவே வளர்ந்தாள். ஆழ்ந்த அமைதி, அளவற்ற அன்பு செலுத்தும் குணம். அசைக்க முடியாத ஆன்மீக ஈடுபாடு என்று அவள் சிறுமியாகவே தெரியவில்லை. 6 வயதில் கதாதர் என்பவரை அவருக்குத் திருமணம் செய்துவைத்தார்கள்.



அவர் பித்துப் பிடித்தவர் போல் இருந்தார். அவருக்கு 'காளியின்' மீது தான் அந்தப் பித்து என்பது யாருக்கும் தெரியவில்லை.

பின்னாட்களில் அன்னை சாரதா தேவியாக இருந்த தாகூர் மணி, அன்புச் சுரங்கமாகத் திகழ்ந்தாள் என்பதற்கு எத்தனையோ சம்பவங்களைச் சொல்ல முடியும். எந்த ஜீவனும் எதற்காகவும் துன்பப்படுவதை அவள் சகிக்க மாட்டாள். பசுவிற்குப் புல்லைதானே அறுத்துக் கொடுப்பாள். வீட்டில் நாளைக்கு என்று பாதுகாத்து வைத்திருக்கும் தானியங்களை இன்றே சமைத்து பசியில் வாடும் மனிதர்களை அழைத்துப் பரிமாறி, தானே அருகில் அமர்ந்து விசிறி கொண்டு விசிறி பணிவிடை செய்வாள்.

பதினான்கு வயதில் கணவரை சந்தித்தபோது, அவர் சாதாரண கதாதரராக இருக்கவில்லை. துறவியாக இருந்தார். சாரதையின் மனதில் எத்தகைய சலனமுமில்லை. ஆழ்ந்த அமைதியே கொண்டிருந்தது. சூழல் காரணமாக மீண்டும் ஜெயராம் பாடிக்கே திரும்ப நேரிட்டது. உலகத்தில் தூற்றல் பேச்சுகள் துளியும் அவளை நிலைகுலையச் செய்யவில்ல.

பத்தொன்பது வயதில் மிகுந்த சிரமப்பட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணராக இருந்த கணவன் கதாதரை சென்று அடைந்தாள். "நீங்கள் என்னை இந்த உலக பந்தத்தின் கீழே இழுத்துப் போட்டுவிடத்தான் வந்திருக்கிறீர்களா? என்று கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், துளியும் தாமதிக்காமல், தயங்காமல், ''நான் ஏன் உங்களை கீழே இழுத்துப் போடப்போகிறேன்? நீங்கள் தேர்ந்தெடுத்த பாதையில் மேலும் மேலும் முன்னேறுவதற்குத் துணையாகவே இருக்க வந்திருக்கிறேன்'' என்றாள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அபரிமிதமான தெய்வீகக் காதலை வெளிப்படுத்தினார். அன்னையோ அவரைத் தன் பிரதான குருவாக ஏற்றுக் கொண்டு, நிறைய மந்திர உபதேசங்கள் பெற்றார். இருக்கும் இடமே தெரியாமல் தன்னை மறைத்துக் கொண்டே வாழ்ந்தார். அவர்களுக்குள் சரீர பந்தங்களை மீறிய ஆன்மீகப் பரமானந்த நிலை மட்டுமே நிலவி, பார்வதி பரமேஸ்வரராகவே வாழ்ந்தார்கள்.

என்ன ஒரு ஆச்சரியம் என்றால் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பாதம் தொட்டு வணங்கும் போதெல்லாம் அவரை சாக்ஷாத் காளியின் அவதாரமாகவே அவள் பார்த்தாள். அவரோ, அவள் எப்போது தன் முன் வந்து நின்றாலும் மகா காளியே வந்து காட்சி கொடுப்பதாகவே நினைத்தார். இதனை நிரூபிக்கும் வகையில் ஒரு அமாவாசை தினத்தில், அவள் பூஜைக்கு ஏற்பாடுகள் செய்து

கொண்டிருக்கும் போது, அவள் சற்றும் எதிர்பார்க்காத வகையில் அவளையே ஆசனத்தில் அமர்த்தி பூஜைகள் செய்து முடித்தார். அப்போதும் அவள் நிதானமாகவே இருந்தாள். ஆனால் அவளுக்குள் ஒரு தெய்வீக சக்தி புகந்து கொண்டதை உணரவே செய்தாள்.

அதன் பிறகு, அன்னை சாரதையாகவே மாறிப்போனார். அளவற்ற அன்பும், யாராலும் கண்டறிய முடியாத தெய்வீக சக்தியும் கொண்டவராக இருந்தார். அன்னை சீடர்கள் எத்தனை விரட்டியும் போகாமல் தன்னைப் பார்ப்பதற்காகவே காத்துக் கொண்டிருந்த தீவிர மன நோய் கொண்டிருந்தவனை கொஞ்சம் கூட பயமின்றி தன் அருகில் வரவழைத்து, அனைத்து பரிவோடு உணவு ஊட்டிவிட்டார். அதன் பிறகு, அவன் சித்தம் தெளிந்தவனாக ஆஸ்ரமத்தில் வளைய வந்ததை அனைவரும் வியப்புடன் பார்த்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மறைவுக்குப் பிறகு அன்னை ஆன்மீக யாத்திரைகளை மேற்கொண்டார். பிருந்தாவனத்தில் அவர், காலை எடுத்துவைத்ததும் 'நிர்விகல்ப சமாதி' நிலை அனுபவம் பெற்ற பிறகு, குருவின் ஸ்தானத்திற்கு உயர்ந்து நின்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடர்கள், பக்தர்கள் பலருக்கும் மந்திர உபதேசங்களை செய்தார். அனைவரையும் தனது குழந்தைகளாவே கருதி அளவற்ற அன்பை செலுத்தினார். அவரது அன்பின் பரிமாணத்தை நேரில் அனுபவித்தவர்கள் திகைத்துத் திக்கு முக்காடிப் போனார்கள். எவ்வாறு இது சாத்தியம் என்று வியந்து நின்றார்கள்.

1920-ம் ஆண்டு ஜுலை மாதம், அதிகாலை மணி 1.30க்கு அன்னை சாரதா பூவுலக வாழ்க்கையைத் துறந்தார். அவர் இறுதியாக உதிர்த்த உபதேசம் இதுதான்.

உங்களுக்கு மன நிம்மதி வேண்டும் என்றால், யாரிடமும் குற்றம் கண்டுபிடிக்காதீர்கள். உங்கள் குற்றங்களை உணர்ந்து சரி செய்து கொள்ளுங்கள். உலக ஜீவன்கள் அனைத்தும் என் குழந்தைகள் என்றால் என் பக்தர்களாகிய உங்களுக்கு அவர்கள் சொந்தங்கள் என்று நினைவில் கொள்ளுங்கள்.

அன்னை சாரதையின் இந்த அருள் வாக்கினையே நமது சங்கல்பமாகக் கொள்வோம்!.

உலக மகளிர் தினம் 08.03.2019 வெள்ளிக்கிழமை

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**




# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

**CODE 1405**

**பாடப்பிரிவுகள்:**

**இளநிலை (பி.இ.)**

**MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE**

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

**வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.**

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**




**டாக்டர். வி.பி.இராமமூர்த்தி. பிஎச்.டி.**
**நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்**
**மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்**

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம், சென்னை - 601 301, தமிழ்நாடு**

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**
**044 - 71 700 801 / 803 / 2436 3321.**
**www.dce.edu.in**

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **19.03.2019 செவ்வாய்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**03.03.2019, ஞாயிற்றுக்கிழமை**

**மாங்காடு**

**அருள்மிகு வெள்ளீஸ்வரர் திருக்கோயில்**

**(மாங்காடு காமாட்சியம்மன் கோயில் அருகில்)**



ஆரோக்கியமான வாழ்க்கைக்கு
**பசுமை**
ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்

நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி,
சென்னை - 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)
**044-42325018**

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயணமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**

# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

## அன்றாடம் அக்குபிரஷர்

### அக்குபிரஷர் வரலாறு

நமது உடம்பில் நரம்புகள் எல்லா உறுப்புகளிலும் பரவியுள்ளன. இந்த நரம்புகளின் கடைசிப் பகுதியை அக்கு என்பார்கள். இந்த அக்கு, புள்ளிகளில் கொடுக்கப்படுகிற அழுத்தத்தை அக்குபிரஷர் எனவும், அக்குபுள்ளிகளில் ஊசிகளைக் கொண்டு குத்தினால் அக்குபஞ்சர் எனவும் கூறப்படுகிறது.

உடலின் தசைகளை இயக்குவது நரம்புகளின் வேலையாகும். இதை கருத்தில் கொண்டு நமது முன்னோர்கள், நம் உடலின் பாகங்களில் சில மர்மப் புள்ளிகள் உள்ளன என்று கண்டுபிடித்திருந்தார்கள். இந்த புள்ளிகளை நம் நாட்டில் வர்மப் புள்ளிகள் எனவும், சீனர்கள் அக்குபஞ்சர் புள்ளிகள் எனவும் பெயரிட்டனர்.

அக்குபஞ்சர் புள்ளிகளில் விரலினால் அழுத்தி அல்லது ஊசியால் குத்தி உடலிலுள்ள நரம்புகளையும், தசைகளையும் மறத்துப் போகச் செய்யவும் அவைகளின் செயல் திறனை ஊக்குவிக்கவும் முடியும் என்றும் கண்டுபிடித்தார்கள். இந்த முறைகளின் மூலம் நோய்களை குணமாக்கும் வைத்திய முறையே அக்குபஞ்சர் வைத்திய முறை என்றழைக்கப்படுகிறது.

இன்றைய பிரபல குங்பூ, கராத்தே, ஜூடோ என்று படிப்படியாக வளரும் சண்டைப் பயிற்சிகள், அக்குபஞ்சர் என்று மருத்துவ முறையிலிருந்து தோன்றியதே ஆகும்.

டாக்டர் **S.K.மீனா வாசுகி**
Acupuncture Specialist, Yoga & Varma Healer